## மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மீதான தாக்குதல்

மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இனந்தெரியாத குழுவொன்றினால் இன்று 2016 செப்டம்பர் 04 இல் தாக்கப்பட்டுள்ளார் என்பதை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

இலங்கை அரசாங்கம் மலேசியாவிலுள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் மீது புரியப்பட்ட வன்முறையான இச்செயலை வன்மையாகக் கண்டிக்கிறது. உயர்ஸ்தானிகர் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்.

குற்றம் புரிந்தவர்களை அடையாளம் காண்பதற்கும் விசாரணைகளுக்கு உதவுவதற்கும் கோலாலம்பூரிலுள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர், மலேசிய உள்ளூர் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மற்றும் இயைபான உள்ளூர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சம்பவத்தின் தீவிரத்தை உணர்ந்து, இராஜதந்திர வழிகளில் இது சம்பந்தமான தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2016 செப்டம்பர் 2016